சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 3–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – ராஜசேகர் (Pw3) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

நான் T.வேளாங்குடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்த வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண் 108/2 T.வேளாங்குடி கிராம எல்லைக்குட்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 108/2 தற்போது 108/2A மற்றும் 108/2B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண். 108/2A எத்தனை செண்ட் என்றால் 0.02.02 ஹெக்டேர்ஸ். செண்ட் கணக்கில் 5 செண்ட். சர்வே எண். 108/2B எத்தனை செண்ட் என்றால் 0.22.48 ஹெக்டேர்ஸ். செண்ட் கணக்கில் 55 செண்ட். சர்வே எண். சர்வே எண். 108/2A யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் முத்து மகன் பாண்டி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண். 108/2B யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் திருப்பதி மகன் கணபதி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.சர்வே எண். 108/2A பாண்டி என்பவர்

பெயருக்கு பட்டா வழங்குவதற்கு முன்பாக யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் வீரச்சாமி மகன் சேகர் என்பவர் பெயரில் 1112 என்ற எண் கொண்ட பட்டா வழங்கப்பட்டுள்ளது. அது எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 12.02.2018 ல் வழங்கப்பட்டது. சேகர் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சேகர் எந்த அதிகாரிடம் பட்டா கேட்டு விண்ணப்பித்தார் என்றால் திருச்சுழி வட்டாட்சியரிடம் விண்ணப்பம் செய்துள்ளார். திருச்சுழி வட்டாட்சியரை விசாரித்தால் சேகர் விண்ணப்பம் கொடுத்த தெரிய வரும். பொதுவாக ஒரு நபர் பட்டா கேட்டு விண்ணப்பம் அளிக்கும் போது வட்டாட்சியர் அறிவுறுத்தலின் பேரில் கிராம நிர்வாக அலுவலர் எந்த இடத்திற்கு பட்டா வழங்க வேண்டும் என்று இடத்தை காட்ட வேண்டியது கிராம நிர்வாக அலுவலரின் கடமை என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் சேகர் என்பவருக்கு பட்டா ஏற்பட்ட போது கிராம நிர்வாக அலுவலர் இடத்தை காண்பித்துள்ளார். ஒரு புலன் எண்ணில் பிரிவு ஏற்படும் போது அதை சுற்றியுள்ள நான்குமால் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சேகருக்கு பட்டா ஏற்படும் போது சுற்றியுள்ள நான்குமால் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதா என்றால் அந்த கால கட்டத்தில் நான் பணியில் இல்லை. அந்த கால கட்டத்தில் யார் பணியில் இருந்த கிராம நிர்வாக அதிகாரி யார் என்று எனக்கு தெரியாது. அவரை விசாரித்தால் உண்மை நிலை தெரிய வரும் என்றால் சரிதான். சர்வே எண். 108/2A யில் சேகர் பெயரில் இருந்து பாண்டி பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்ட போது இடத்தை பார்வையிட்டார்களா என்றால் அந்த சமயத்தில் நான் பணியில் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 19 ன் படி மேற்படி தாவா பிரச்சனையின் போது கிராம நிர்வாக

அலுவலராக செண்பகம் என்பவர் பணியில் இருந்தார். சர்வே எண். 108/2A சேகர் பெயருக்கு பட்டா ஏற்படுவதற்கு முன்பு வேறு யார் பெயரிலும் பட்டா ஏற்படவில்லை.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.